குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.44/2020

அ.சா.2

2025–ம் ஆண்டு நவம்பர் 10–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதி | தொழில் | |
| தந்தை பெயர் | பழனிசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.25 மணி,

Accused Venkatesan present. Advocate Mr.Siddharthasankar present for Advocate Mr.P.Dasaradhan for accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் ஆர்.சி.செட்டிப்பட்டியில் வசித்து, சலூன் கடை, துணிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு இரவு 07.00 மணியளவில் நான் எனது சலூன் கடையில் இருந்தேன். எனது கடை ஆர்.சி.செட்டிப்பட்டியில் ஓமலூர் செல்லும் வழியில் உள்ளது. என் கடைக்கு வெளியே சாலையில் சத்தம் கேட்டது. வெளியே வந்து பார்த்தபோது, விபத்து ஏற்பட்டு அ.சா.1 சங்கரன் கீழே விழுந்து கிடந்தார்.

2. செட்டிப்பட்டியில் இருந்து ஓமலூர் நோக்கி வந்த அரசுபேருந்து சங்கரன் மீது மோதிவிட்டது. விபத்தின்போது சங்கரன் எப்படி வந்தார் என்று எனக்கு தெரியாது. சங்கரனுக்கு வலது கால் மற்றும் தலை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. ஆம்புலன்ஸ் மூலமாக அவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்து ஏற்படுத்திய பேருந்தின் பதிவெண் மற்றும் அதன் ஓட்டுநரை எனக்கு தெரியாது. ஆர்.சி.செட்டிப்பட்டி ரவுண்டானா எனது கடையில் இருந்து சுமார் 20 மீ தூரத்தில் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2025.11.10 17:58:59 +0530

3. சம்பவம் நடந்தபோது 07.00 – 07.30 மணி இருக்கும். இருட்டாக இருந்தது என்றால் சரி. சம்பவ இடத்தில் ரோட்டை கடப்பதற்கான குறியீடு எதுவும் இல்லை என்றால் சரி. நான் நேரடியாக விபத்து பார்க்கவில்லை என்றாலும், சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றாலும் சரி.

4. நான், சம்பவ இடத்திற்கு சென்றபோது சுமார் 30 நபர்கள் இருந்தார்கள். நான் முதல்விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரி.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.32 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.11.10 17:59:02 +0530